

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.276/2015
தேதி.17.11.2015

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ பார்வையிட்டார். பாதிக்கப்பட்டவர்க்களுக்கு ஆறுதல்.

கடந்த சில தினங்களாக பெய்து வரும் கனமழை காரணமாக மழை வெள்ளப் பெருக்கெடுத்து பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்திருக்கிறது. அரசு இயந்திரம் நிவாரணப் பணிகளை முழுவீச்சோடு முடுக்கி விட்டிருக்கும் நிலையில், அவர்களோடு இணைந்து சமூக அமைப்புகளும், தன்னார்வலர்களும், தொண்டு நிறுவனங்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை மேற்கொண்டு வருகிறார்கள். சமத்துவ மக்கள் கட்சித் தோழர்களும் ஆங்காங்கே பொதுமக்களுக்கு உதவிகளைச் செய்து வருகிறார்கள்.

கடந்த 10 நாட்களாக சமக தலைவர் வெளிநாடு சென்றிருந்தபடியால் இன்று சமத்துவ மக்கள் கட்சியின் தென்சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சோழிங்கநல்லூர் பகுதி 196வது வட்டத்தில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார். அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவும் போர்வை உள்ளிட்ட நிவாரணப் பொருள்களும் வழங்கினார். மக்களின் நடமாட்டத்திற்கு உதவும் வகையில் அப்பகுதி மீனவ சமுதாய நண்பர்கள் மூலமாக மேலும் சில படகுகளை இயக்குவதற்கு நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார். அப்பகுதி மக்களுக்கு பாதுகாப்பு மற்றும் உடல் நலம் குறித்த ஆலோசனைகளைப் பகிர்ந்து கொண்டார்.

நன்றி, வணக்கம்,

கரு.நாகராஜன்,
பொதுச்செயலாளர்

**படம் இணைக்கப்பட்டுள்ளது**